செய்தி வெளியீடு எண். 101 நாள்: 15.02.2018

**மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் மற்றும் ஆலோசனைக் குழு கூட்டம் 21.02.2018 அன்று நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவ்வாறு செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் கை, கால், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர், பார்வை குறைபாடு, பார்வையற்றவர், மனவளர்ச்சி குன்றியவர், மூளை முடக்குவாதம், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர், தசைசிதைவு நோய், மனநலம் பாதித்தோர், பல்வகை மாற்றுத்திறன் உடைய மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் சிறப்பு குறை தீர;க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனுக்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக மனுக்கள் பெற்று உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை விவரம் மாற்றுத்திறனாளிகளுக்கு தெரிவிக்கப்படுவதுடன், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பதிவு பெற்ற மாற்றுத்திறனாளிகள் நல சங்கங்களின் கூட்டமைப்புகளுடன் ஆலோசனைக் குழு கூட்டம் 21.02.2018 அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**